சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - கல்வி - சமூகநீதி விடுதிகள் - 2025-2026-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட புதிய அறிவிப்புகள் – 5 புதிய சமூகநீதி விடுதிகள் (கல்லூரி மாணவியர்) தொடங்க நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல (பிந1(2))த் துறை

அரசாணை (நிலை) எண். 72 நாள் : 07.08.2025

விசுவாவசு, ஆடி 22

திருவள்ளுவர் ஆண்டு, 2056

படிக்கப்பட்டது:

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண்.சி2/1711/2025, நாள் 15.05.2025.

*****

ஆணை:

2025-2026 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியரின் நலன் கருதி, 400 மாணவியர் பயன்பெறும் வகையில் 5 புதிய கல்லூரி மாணவியர் விடுதிகள் ரூபாய் 3 கோடி செலவில் துவங்கப்படும்."

2. மேலே படிக்கப்பட்ட மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடிதத்தில் புதுக்கோட்டை, தஞ்சாவூர், கள்ளக்குறிச்சி, திருவள்ளூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய 5 மாவட்டங்களில் சமூகநீதி விடுதிகள் (கல்லூரி மாணவியர்) தலா 100 மாணவியர் தங்கும் வகையில் தொடங்கலாம் என்றும் மேலும், புதிதாக தொடங்கப்படும் 5 விடுதிகளுக்கு போதகக் காப்பாளினி, சமையலர், காவலர் / ஏவலர், துப்புரவு பணியாளர் போன்ற பணியிடங்கள் அத்தியாவசியமாக தேவைப்படுவதால் போதகக் காப்பாளினி பணியிடங்களை நிரந்தர அடிப்படையிலும் சமையலர், காவலர்/ஏவலர்

மற்றும் துப்புரவு பணியாளர் ஆகிய பணியிடங்களை வெளிமுகமை (Out Sourcing Agency) அடிப்படையில் தோற்றுவிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:-

**<u>தேவையான பணியிட விவரங்கள்</u>**

| வ. எண் | பதவி விவரம் | ஊதிய விகிதம் | 1 விடுதிக்கான பணியிடங்கள் எண்ணிக்கை | 5 விடுதிகளுக்கான பணியிடங்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | பி.எட்., பட்டதாரி போதகக் காப்பாளினி | ரூ.36400-115700 நிலை-16 (36400-134200) | 1 | 5 |
| 2 | சமையலர் (பெண்) | வெளிமுகமை | 2 | 10 |
| 3 | காவலர் / ஏவலர் (பெண்) | வெளிமுகமை | 1 | 5 |
| 4 | துப்பரவு பணியாளர் பெண்) | வெளிமுகமை | 1 | 5 |

எனவே, 5 சமூகநீதி விடுதிகளை (கல்லூரி மாணவியர்) தொடங்குவதற்கு நிருவாக அனுமதியும் இவ்விடுதிகளுக்கு ஏற்படும் தொடர் செலவினம் ரூ.2,17,00,375/- மற்றும் தொடராச் செலவினம் ரூ.46,75,000/-என மொத்தம் ரூ.2,63,75,375/-க்கு நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வழங்குமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கருத்துருவை கவனமுடன் ஆய்வு செய்து, அதன்படி. புதிய சமூகநீதி விடுதிகள் (கல்லூரி மாணவியர்) இவ்வரசாணையின் இணைப்பு -I-ல் தெரிவிக்கப்பட்டுள்ள 5 இடங்களில் தலா 100 மாணவியர் தங்கும் வகையில் தொடங்க அனுமதி அளித்தும் மேற்கண்ட 5 புதிய சமூகநீதி விடுதிகள் (கல்லூரி மாணவியர்) தொடங்கத் தேவைப்படும் தொடர் செலவினம் ரூ.2,17,00,375/- மற்றும் தொடராச் செலவினம் ரூ.35,65,250/- என மொத்தம் ரூ.2,52,65,625/-க்கு (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்திரண்டு இலட்சத்து அறுபத்தி ஐந்தாயிரத்து அறுநூற்று இருபத்தி ஐந்து மட்டும்) கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

i. புதிதாக தொடங்கப்படும் 5 சமூகநீதி விடுதிகளுக்கும் (கல்லூரி மாணவியர்) தலா ஒரு போதகக் காப்பாளினி பணியிடம் வீதம் 5 பணியிடங்கள், காலமுறை ஊதியத்தில் (நிரந்தர அடிப்படையில்) தோற்றுவிக்கவும், சமையலர், காவலர்/ஏவலர் மற்றும் துப்புரவு

பணியாளர் ஆகிய பணியிடங்களை (10.5.5) வெளிமுகமை மூலம் (Out Sourcing Agency) நியமனம் செய்யவும் அனுமதி வழங்கப்படுகிறது.

ii. வெளிமுகமை மூலம் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியச் சட்டம் 1948-ன் படி ஊதியம் மற்றும் பிடித்தங்கள் ஆகியவற்றை வழங்க அனுமதி வழங்கப்படுகிறது. மேலும், இப்பணியாளர்களுக்கான விபத்து காப்பீடு, அவர்களின் ஊதியத்திலிருந்து வருடாந்திர காப்பீட்டுத் தொகை பிடித்தம் செய்ய, குறைந்தபட்ச ஊதியம் மற்றும் அகவிலைப்படி நிர்ணயம் ஆகியவை தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையால் ஒவ்வொரு ஆண்டும் நிர்ணயிக்கப்படும் போது அதற்கேற்ப ஒப்பளிப்பு செய்யவும் மற்றும் விடுதிகள் 10 மாதங்களுக்கு மேல் செயல்பட்டால் பணியாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் மற்றும் அகவிலைப்படி வழங்க தொடர்புடைய துறைத்தலைவருக்கு அனுமதியும் வழங்கப்படுகின்றன.

iii. வெளிமுகமை மூலம் பணியாளர்கள் நியமனம் செய்வதற்கு மாவட்ட ஆட்சியரை தலைவராகவும், உதவி ஆணையர் (தொழிலாளர் நலத்துறை)-ஐ உறுப்பினராகவும் மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலரை குழு கூட்டுநர்/உறுப்பினராகவும் கொண்ட தேர்வுக்குழுவின் மூலம் தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998 விதி 2000-ன் கீழ் உரிய நிபந்தனைக்குட்பட்டு வெளிமுகமையை தேர்வு செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

iv. பணி பொறுப்புகள் குறித்த வரையறைகளை நிர்ணயிக்கும் அதிகாரத்தினை மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் நல ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

i) ஒரு <u>சமூகநீதி விடுதி (கல்லூரி மாணவியர்)</u>

<u>(ரூ.50,70,498/-)</u>

2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – மாநிலச் செலவினங்கள் – AA – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள்.

| வ. எண். | கணக்குத் தலைப்பு | | IFHRMS த.தொ.கு. | தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| **தொடர் செலவினம்** | | | | |
| 1. | 301 | சம்பளங்கள் | 2225- 03- 277-AA-30101 | 8,38,800 |
| | 01 | அடிப்படைச் சம்பளம் | | |
| 2. | 303 | அகவிலைப்படி | 2225-03-277-AA-30301 | 4,61,340 |
| | 01 | அகவிலைப்படி | | |
| 3. | 301 | சம்பளங்கள் | 2225-03-277-AA-30106 | 10,200 |
| | 06 | வீட்டு வாடகைப் படி | | |
| 4. | 301 | சம்பளங்கள் | 2225- 03- 277-AA-30102 | 3,600 |
| | 02 | மருத்துவப்படி | | |
| 5. | 333 | தொழில்முறை, சிறப்பு பணிகளுக்குத் தொகை கொடுத்தல் | 2225- 03- 277-AA-33304 | 10,22,228 |
| | 04 | ஒப்பந்த ஊதியம் | | |
| 6. | 306 | வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் | 2225- 03- 277-AA-30601 | 2,40,000 |
| | 01 | வாடகை | | |
| 7. | 318 | பராமரிப்பு | 2225- 03- 277-AA-31801 | 52,400 |
| | 01 | குறித்த காலப் பராமரிப்பு | | |
| 8. | 324 | பொருள்களும் வழங்கலும் | 2225- 03- 277-AA-32401 | 1,50,000 |
| | 01 | பொருள்களும் வழங்கலும் | | |
| 9. | 367 | உணவளிக்கும்/உணவுச் செலவுகள் | 2225-03-277-AA-36709 | 15,70,000 |
| | 09 | ஏனையவை | | |
| 10. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225-03-277-AA-30501 | 8,880 |
| | 01 | தொலைபேசிக் கட்டணங்கள் | | |
| | | | **மொத்தம்** | **43,57,448** |
| **தொடராச் செலவினம்** | | | | |
| 11. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225- 03- 277-AA-30505 | 60,000 |
| | 05 | அறைகலன் | | |
| 12. | 319 | இயந்திரமும் சாதனமும் | 2225- 03- 277-AA-31901 | 4,03,250 |
| | 01 | வாங்குதல் | | |
| 13. | 324 | பொருள்களும் வழங்கலும் | 2225- 03- 277-AA-32401 | 1,14,800 |
| | 01 | பொருள்களும் வழங்கலும் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 14. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225- 03- 277-AA-30501 | 5,000 |
| | 01 | தொலைபேசிக் கட்டணங்கள் | | |
| 15. | 334 | ஏனையச் செலவுகள் | 2225- 03- 277-AA-33402 | 50,000 |
| | 02 | நூலகங்கள் முதலியவற்றிக்கு புத்தகங்கள், குறித்த கால வெளியீடுகள் வழங்குதல் | | |
| 16. | 376 | கணினியும் துணைப் பாகங்களும் | 2225- 03- 277-AA-37601 | 80,000 |
| | 01 | வழங்குதல் | | |
| | | | மொத்தம் | 7,13,050 |

(ii) **<u>நான்கு சமூகநீதி விடுதிகள் (கல்லூரி மாணவியர்)</u>** ரூ. 2,01,95,127/-

2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – மாநிலச் செலவினங்கள் – BC – மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள்

| வ. எண். | கணக்குத் தலைப்பு | | IFHRMS த.தொ.கு. | தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| | | தொடர் செலவினம் | | |
| 1. | 301 | சம்பளங்கள் | 2225- 03- 277-BC-30101 | 33,55,200 |
| | 01 | அடிப்படைச் சம்பளம் | | |
| 2. | 303 | அகவிலைப்படி | 2225-03-277--BC -30301 | 18,45,360 |
| | 01 | அகவிலைப்படி | | |
| 3. | 301 | சம்பளங்கள் | 2225-03-277-BC -30106 | 40,800 |
| | 06 | வீட்டு வாடகைப் படி | | |
| 4. | 301 | சம்பளங்கள் | 2225- 03- 277--BC -30102 | 14,400 |
| | 02 | மருத்துவப்படி | | |
| 5. | 333 | தொழில்முறை, சிறப்பு பணிகளுக்குத் தொகை கொடுத்தல் | 2225- 03- 277--BC -33304 | 40,02,047 |
| | 04 | ஒப்பந்த ஊதியம் | | |
| 6. | 306 | வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் | 2225- 03- 277--BC -30601 | 9,60,000 |
| | 01 | வாடகை | | |
| 7. | 318 | பராமரிப்பு | 2225- 03- 277--BC -31801 | 2,09,600 |
| | 01 | குறித்த காலப் பராமரிப்பு | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | 324 | பொருள்களும் வழங்கலும் | 2225- 03- 277--BC -32401 | 6,00,000 |
| | 01 | பொருள்களும் வழங்கலும் | | |
| 9. | 367 | உணவளிக்கும்/ உணவுச் செலவுகள் | 2225-03-277--BC -36709 | 62,80,000 |
| | 09 | ஏனையவை | | |
| 10. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225-03-277--BC -30501 | 35,520 |
| | 01 | தொலைபேசிக் கட்டணங்கள் | | |
| | | | மொத்தம் | 1,73,42,927 |
| | | தொடராச் செலவினம் | | |
| 11. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225- 03- 277-BC -30505 | 2,40,000 |
| | 05 | அறைகலன் | | |
| 12. | 319 | இயந்திரமும் சாதனமும் | 2225- 03- 277--BC -31901 | 16,13,000 |
| | 01 | வாங்குதல் | | |
| 13. | 324 | பொருள்களும் வழங்கலும் | 2225- 03- 277--BC -32401 | 4,59,200 |
| | 01 | பொருள்களும் வழங்கலும் | | |
| 14. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225- 03- 277--BC -30501 | 20,000 |
| | 01 | தொலைபேசிக் கட்டணங்கள் | | |
| 15. | 334 | ஏனையச் செலவுகள் | 2225-03-277--BC -33402 | 2,00,000 |
| | 02 | நூலகங்கள் முதலியவற்றிக்கு புத்தகங்கள், குறித்த கால வெளியீடுகள் வழங்குதல் | | |
| 16. | 376 | கணினியும் துணைப் பாகங்களும் | 2225- 03- 277--BC -37601 | 3,20,000 |
| | 01 | வழங்குதல் | | |
| | | | மொத்தம் | 28,52,200 |

5. மேலே, பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான நிதியொதுக்கம் ரூ.2,52,65,625/-, 2025-2026-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2025-26-ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு சிறப்பு நிகழ்வாக கொணர்ந்து சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று வழங்கிட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர்

மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்தை 2025-2026-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது உரிய நேரத்தில் நிதி [பி, மிபி (ம) சி.ந/வ.செ.பொ.-I]த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

6. மேற்காணும் 5 புதிய சமூகநீதி விடுதிகளும் (கல்லூரி மாணவியர்) முறையாக தொடங்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை இத்துறையின் மின் கோப்பு எண் (efile No) 10363720/பிந1(2)/2025-ல் குறிப்பு எண்.#49, நாள்: 29.07.2025 மற்றும் பணியிட பேரேடு எண்.202508PSL0133-ல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். IFHRMS ASL No.2025070964

(ஆளுநரின் ஆணைப்படி)

எ. சரவணவேல்ராஜ்
அரசு செயலாளர்

பெறுநர்
ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை- 5.
ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சீர்மரபினர் நலன், சென்னை- 5.
மாநில கணக்காயர், சென்னை-18. (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை- 1), சென்னை-18 (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை- 2), சென்னை-18 (பெயரில்).
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்,
சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-5.

ஆணையர், சிறுபான்மையினர் நலன், சென்னை-5.,

மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் சுற்றுச்சூழல் &காலநிலை மாற்றம்)

அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.

மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்)

அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்

சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் அவர்களின்

முதுநிலை தனிச்செயலர், சென்னை-9.

நிதி (பி, மிபி மற்றும் சிந/வ.செ.பொது-1/2/வ.வ.-1/மை.ம.ஆ.பி)த் துறை,

சென்னை – 9.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்

சிறுபான்மையினர் நலத்(பிந3) துறை, சென்னை – 9

இருப்புக் கோப்பு/உபரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு-I

அரசாணை (நிலை) எண்.72, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த் துறை, நாள் 07.08.2025-ன் இணைப்பு.

**5 புதிய சமூகநீதி விடுதிகள் (கல்லூரி மாணவியர்) மற்றும் அவ்விடுதிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட மாணவிகளின் எண்ணிக்கை**

| வ. எண். | விடுதியின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட மாணவியர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சமூகநீதி விடுதி (கல்லூரி மாணவியர்), கீழாத்தூர், ஆலங்குடி, புதுக்கோட்டை மாவட்டம் | 100 |
| 2. | சமூகநீதி விடுதி (கல்லூரி மாணவியர்), தஞ்சாவூர், தஞ்சாவூர் மாவட்டம் | 100 |
| 3. | சமூகநீதி விடுதி (கல்லூரி மாணவியர்), பாவந்தூர், கள்ளக்குறிச்சி மாவட்டம் | 100 |
| 4. | சமூகநீதி விடுதி (கல்லூரி மாணவியர்), பொன்னேரி, திருவள்ளூர் மாவட்டம் | 100 |
| 5. | சமூகநீதி விடுதி (கல்லூரி மாணவியர்), ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம் | 100 |

எ. சரவணவேல்ராஜ்
அரசு செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.
07/08/2025

## இணைப்பு-II

அரசாணை (நிலை) எண்.72, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த் துறை, நாள் 07.08.2025-ன் இணைப்பு

### தொடர் செலவினம்

| வ. எண் | பதவி மற்றும் குறைந்தபட்ச ஊதியம் | 1 சமூகநீதி விடுதிக்கான தொகை ரூ. | 4 சமூகநீதி விடுதிகளுக்கான தொகை ரூ. | மொத்தம் 5 சமூகநீதி விடுதிகளுக்கான தொகை ரூ |
|---|---|---|---|---|
| 1 | பி.எட் பட்டதாரி போதகக் காப்பாளினி (Level- 16) என்ற ஊதிய ஏற்றமுறை (Rs.109495x12=1313940/-) | 13,13,940 | 52,55,760 | 65,69,700 |
| 2 | இரு சமையலர் பணியிடம் (வெளிமுகமை) குறைந்தபட்ச ஊதிய நிர்ணய விதி 1948-ன்படி (உள்ளாட்சி அமைப்புகள் வாரியாக) | 6,53,658 | 25,34,588 | 31,88,246 |
| 3 | காவலர்/ ஏவலர் பணியிடம் (வெளிமுகமை) குறைந்தபட்ச ஊதிய நிர்ணய விதி 1948-ன்படி (உள்ளாட்சி அமைப்புகள் வாரியாக) | 2,15,236 | 8,55,727 | 10,70,963 |
| 4 | துப்புரவுப் பணியாளர் பணியிடம் (வெளிமுகமை) குறைந்தபட்ச ஊதிய நிர்ணய விதி 1948-ன்படி (உள்ளாட்சி அமைப்புகள் வாரியாக) | 1,53,334 | 6,11,732 | 7,65,066 |
| 5 | விடுதி வாடகை (ரூ. 20000 x 1 X 12 மாதங்கள்) | 2,40,000 | 9,60,000 | 12,00,000 |
| 6 | குறித்த கால பராமரிப்பு செலவினம் (ரூ.50,000 ) | 50,000 | 2,00,000 | 2,50,000 |
| 7 | சோப்பு மற்றும் தேங்காய் எண்ணெய் (100(மாணவியர்) X ரூ.150X10 (மாதங்கள்)) | 1,50,000 | 6,00,000 | 7,50,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | 100 மாணவியர் மற்றும் 2 சமையலர்களுக்கான உணவுக் கட்டணம் (102x ரூ.1500x10(மாதங்கள்)= 15,30,000) | 15,30,000 | 61,20,000 | 76,50,000 |
| 9 | சிறப்பு உணவு செலவினம் (100(மாணவர்கள்) x5 (பண்டிகை) x ரூ.80= ரூ.40000) | 40,000 | 1,60,000 | 2,00,000 |
| 10 | தொலைபேசி கட்டணம் ஒரு வருடத்திற்கான செலவு (ரூ.740 x12 மாதங்கள் ) | 8,880 | 35,520 | 44,400 |
| 11 | DTH இணைப்பு ஒரு வருடத்திற்கான செலவு | 2,400 | 9,600 | 12,000 |
| | மொத்தம் | 43,57,448 | 1,73,42,927 | 2,17,00,375 |

எ. சரவணவேல்ராஜ்
அரசு செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.

## இணைப்பு-III

அரசாணை (நிலை) எண்.72, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த் துறை, நாள் 07.08.2025-ன் இணைப்பு

### தொடராச் செலவினம்

| வ. எண் | | பொருட்கள் | 1 சமூகநீதி விடுதிக்கான தொகை ரூ. | 4 சமூகநீதி விடுதிகளுக்கான தொகை ரூ. | மொத்தம் 5 சமூகநீதி விடுதிகளுக்கான தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | | மரச்சாமன்கள் ( ரூ.40,000) (Steel Table & Steel wire chairs) புத்தக அலமாரி (ரூ 20,000) | 60,000 | 2,40,000 | 3,00,000 |
| 2 | | இயந்திரமும் சாதனமும் | | | |
| | i) | எரிவாயு இணைப்பு | 50,000 | 2,00,000 | 2,50,000 |
| | ii) | அரவை இயந்திரம் (Commercial 10 litres Tilting ) Semi automatic | 25,000 | 1,00,000 | 1,25,000 |
| | iii) | குடிநீர் சுத்திகரிப்பு கருவி 25 LPH/Commercial RO+ UV Technology | 15,000 | 60,000 | 75,000 |
| | iv) | இன்வெர்ட்டர் – 1 2.5 KVA Inverter with 2 batteries | 25,000 | 1,00,000 | 1,25,000 |
| | v) | முதலுதவிப் பெட்டி | 1,250 | 5,000 | 6,250 |
| | vi) | (விளையாட்டுக் கருவிகள் - 20000+ உடற்பயிற்சி கருவிகள் - 20000) | 40,000 | 1,60,000 | 2,00,000 |
| | vii) | வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டி (43" LED) Crystal | 40,000 | 1,60,000 | 2,00,000 |
| | viii) | பூச்சி அழிப்பான்-1 | 6,000 | 24,000 | 30,000 |
| | ix) | மின் அரைப்பான்-1 (Mixie) 1300 Watts | 10,000 | 40,000 | 50,000 |
| | x) | தீயணைப்பான் கருவி-4 | 6,000 | 24,000 | 30,000 |
| | xi) | தோசைக்கல் Size 48*24*32 inch (Stainless Steel) | 20,000 | 80,000 | 1,00,000 |
| | xii) | பாத்திரம் | 40,000 | 1,60,000 | 2,00,000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | xiii) | CCTV கேமரா - 8 எண்ணிக்கை | 1,00,000 | 4,00,000 | 5,00,000 |
| | xiv) | சுகாதார குட்டைத் தகளி-1 | 25,000 | 1,00,000 | 1,25,000 |
| 3 | | பொருட்களும் வழங்கலும் | | | |
| | i) | ஜமக்காளம் (100 x ரூ. 500) | 50,000 | 2,00,000 | 2,50,000 |
| | ii) | தட்டு மற்றும் டம்ளர் (100 x ரூ.125) | 12,500 | 50,000 | 62,500 |
| | iii) | பெட்ஷீட் (100x ரூ. 323) | 32,300 | 1,29,200 | 1,61,500 |
| | iv) | தலையணை மற்றும் உறை (100X ரூ. 200) | 20,000 | 80,000 | 1,00,000 |
| 4 | | செம்மொழி நூலகம் | 50,000 | 2,00,000 | 2,50,000 |
| 5 | | தொலைபேசி மற்றும் இணையவழி இணைப்பு பெறுவதற்கான கட்டணம் | 5,000 | 20,000 | 25,000 |
| 6 | | மின் நூலகம் (All in one Desktop, Printer & UPS) | 80,000 | 3,20,000 | 4,00,000 |
| | | மொத்தம் | 7,13,050 | 28,52,200 | 35,65,250 |

எ. சரவணவேல்ராஜ்
அரசு செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.